40 நாள்

# இயேசு "என்னைப் பின்பற்றட்டும்" மத்தேயு 16:24

## தவக்கால சிந்தனைகள்

### தினமும் காலை 6.00 - 6.30 திருவிருந்து

40 தியானம்

அன்பான திருச்சபைக்கு !

கிறிஸ்துவில் புது வாழ்வு பெற நம்மை அழைக்கும் காலம் லெந்து காலம். தபசு காலங்களில் நாற்பது நாட்கள் உபவாசம், செபம், ஒறுத்தல், தியானம், ஈகை என்று பலவற்றை நம் வாழ்வில் பின்பற்றுகிறோம். இவ்வாண்டும் நம் ஆலயத்தில் 40 நாட்கள் தவக்கால தின தியானம் காலை 6.00 மணி முதல் 6.30 மணி வரை தினமும் திருவிருந்து வழிபாடு நடைபெறும். **இயேசு – என்னை பின்பற்றட்டும்** எனும் தலைப்பில் அருள்நாதர் **இயேசுவின் தெய்வீக குணங்களின்** மகத்துவங்களை நாம் ஒன்றிணைந்து சிந்திப்போம். அனைவரும் தவறாமல் பங்கேற்று இறை ஆசி பெற அன்புடன் அழைக்கிறேன்.

**நாற்பது நாட்கள் கடவுளின் கற்பனைப்படி செயல்பட்டால்**
**அந்த ஆன்மா புதிய வாழ்வைக் கண்டு கொள்கிறது.**

கிரேக்க பழமொழி

| நாள் / கிழமை | பொருள் | திருமறைப்பகுதி |
|---|---|---|
| 18.02.2026 புதன்கிழமை | இயேசுவின் நோன்பு | மத்தேயு 4:2 |
| 19.02.2026 வியாழக்கிழமை | இயேசு சந்தித்த சோதனை | மத்தேயு 4:1-11 |
| 20.02.2026 வெள்ளிக்கிழமை | இயேசுவின் கீழ்ப்படிதல் | லூக்கா 2:51 |
| 21.02.2026 சனிக்கிழமை | இயேசுவின் ஞானம் | லூக்கா 2:52 |
| 23.02.2026 திங்கட்கிழமை | இயேசுவின் ஜெபம் | மாற்கு 1:35 |
| 24.02.2026 செவ்வாய்கிழமை | இயேசுவின் பரிவு | மத்தேயு 14:14 |
| 25.02.2026 புதன்கிழமை | இயேசுவின் துணிவு | யோவான் 18:23 |
| 26.02.2026 வியாழக்கிழமை | இயேசுவின் கண்ணீர் | யோவான் 11:35 |
| 27.02.2026 வெள்ளிக்கிழமை | இயேசுவின் சாந்தம் | மத்தேயு 11:29 |
| 28.02.2026 சனிக்கிழமை | இயேசுவின் மனத்தாழ்மை | பிலிப்பியர் 2:6-8 |

தென்னிந்தியத் திருச்சபை – சென்னைப் பேராயம் படப்பை குருசேகரம்

CSI கிறிஸ்து நாதர் ஆலயம், டேவிட் நகர், படப்பை – 601 301.

# விழுதுகள்

## பிப்ரவரி - 2026

(உறுப்பினர் பயன்பாட்டிற்கு மட்டும்)




"ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால்,
அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை
எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்."

மத்தேயு 16 : 24

## ஆயர் மடல்

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே !

புனிதமான தவக்காலத்தில் (Lent) நுழையத் தயாராகும் உங்கள் அனைவரையும் அன்புடன் வாழ்த்துகிறேன்!

தவக்காலம் நம் இதயங்களைப் புதுப்பிக்கவும் ஜெபம், உபவாசம், தானம் மூலம் கடவுளிடம் நெருங்கி வருவதற்குத் திருச்சபை நமக்கு வழங்கும் ஆன்மீக அழைப்பாகும். சாம்பல் புதனில் தொடங்கி கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் வரை நாற்பது நாட்கள் கிறிஸ்துவைப் பின்பற்றும் நமக்கு, தனி மனித ஆன்மீகத்தையும் இறை மனித உறவை வளர்த்துக் கொள்ளும் கிருபையின் காலம் தவக்காலம் .

இந்தப் புனிதமான ஆரம்பம் நம்மை கிறிஸ்துவைப் போல மனத்தாழ்மைக்கு வழி நடத்தி பாவத்திலிருந்து விலகித் தூய வாழ்வு வாழ வலியுறுத்துகிறது. இது வெறும் வெளிப்புறமான சடங்காக அனுசரிக்காமல் கிறிஸ்துவின் குணநலன்களால் அவரின் முன் மாதிரியை பின்பற்றி அன்பினால் நம் இதயங்களை இணைக்கும் மாற்றத்திற்கான உள் அழைப்பாக உணர்வோம்.

**ஜெபம் :**

தவக்காலத்தின் நாற்பது நாட்கள் இயேசு பாலைவனத்தில் கழித்த நேரத்தைப் பிரதிபலிக்கின்றன. ஜெபம் கடவுளுடனான நமது உறவை ஆழப்படுத்துகிறது. அவரது சித்தம் நம்மில் நிறைவேற, நம் இதயங்களை திறக்கிறது, எனவே திருமறை வாசிப்பதிலும் தியானிப்பதிலும் ஒவ்வொரு நாளும் ஜெபத்திலும் இறைவனுடன் அமைதியான உரையாடலில் தரித்திருக்க நேரத்தை ஒதுக்குமாறு நான் உங்களை ஊக்குவிக்கிறேன்.

**நோன்பு :**

தவக்காலம் நமக்குச் சுய ஒழுக்கத்தைக் கற்றுக் கொடுக்கிறது. மேலும் நம்முடைய பசி மன்னாவாகிய கடவுளுக்கானது என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. இக்காலத்தில் சில உணவுகள் (அ) பழக்கவழக்கங்களைத் தவிர்ப்பது மூலம் நம் வாழ்வில் ஆன்மீக வளர்ச்சிக்கும் உடல் வளர்ச்சிக்குமான இடத்தை உருவாக்குகிறோம். உபவாசம் என்பது எதையாவது விட்டுக்கொடுப்பது மட்டுமல்ல கடவுளின் கிருபை நம்மை நிரப்ப இடமளிப்பது என்பதை நினைவில் கொள்வோம்.

**தானம் :**

தேவையில் உள்ளவர்களுக்கு நம்மால் இயன்றதைக் கொடுப்பதே தானம். தவக்காலம் என்பது ஏழைகள் ஒதுக்கப்பட்டவர்கள் தனிமையில் இருப்பவர்களுடன் நமது ஆசீர்வாதங்களைப் பகிர்ந்து கொள்ளும் நேரமாகும். பிறர் நலன் கருதாத எந்தத் தனி மனித வளர்ச்சியையும் வளர்ச்சி எனக் கருத



முடியாது. இந்த தவக்காலங்கள் அடுத்தவரின் அவசியத் தேவையை நம்மால் இயன்றவரை நிறைவு செய்யும் நாட்களாக அமைய நம் அகக்கண்களை திறந்து இறைபக்தியுடன் பிறரன்போடும் பயணிக்க முயல்வோம்.

இந்தக் கிருபையின் தவக்காலங்கள் சோதனைகளைக் கடந்து, பாவத்தை வென்று உயிர்த்தெழுந்த கிருத்துவிடம் நம்மை நெருங்கிச் சேர்க்கட்டும். உங்கள் தூய வாழ்வுக்காகவும் கடவுளின் ஏராளமான ஆசீர்வாதங்களுக்காகவும் தொடர்ந்து ஜெபிக்கிறேன்.

**தமிழர் திருநாள் கிராமிய இசை வழிபாடு – 2026 :**

கடந்த 11.01.2026 ஞாயிறு அன்று நமது ஆலயத்தில் பெண்கள் ஐக்கிய சங்கம் சார்பாக கிராமிய இசை வழிபாடு சிறப்பாக நடைபெற கடவுள் கிருபை செய்தார். அதனை தொடர்ந்து நடைபெற்ற சிறப்பு நிகழ்வுகளில் மகிழ்ச்சியோடும் உற்சாகத்தோடும் பங்கேற்ற பெண்கள் ஐக்கிய சங்கத்தினரையும், சபையாரையும் மற்றும் இசைகுழுவினர் திரு. ஆலிவர், திரு. மோரிஸ் அவர்களையும் அன்போடு வாழ்த்துகிறேன்.

**சாலமங்கலம் கட்டுமான பணி :**

நமது கிராம கிளை திருச்சபையான சாலமங்கலம் தூய பேதுரு ஆலயத்தின கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது. ஆலயம் கட்டும் பணி விரைந்து முடிக்க திருச்சபையார் தங்கள் உதாரத்துவமான பங்களிப்பாகவோ தேவைப்படும் பொருளாகவோ வழங்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் அதற்கென 01.02.2026 ஞாயிறு அன்று நடைபெறும் சிறப்பு விற்பனை விழவில் சபையார் தங்கள் குடும்பத்தின் சார்பாக ஏலப்பொட்களை வைக்கவும், விற்பனை விழாவில் உற்சாகமாய் பங்கேற்கவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். ஆலம் கட்டும் மிகப்பெரிய தரிசன பணிக்காக சபையார் தொடர்ந்து ஜெபிக்கவும்.

**அரசு பொது தேர்வு எழுதும் மாணவர்களுக்கான ஜெபம் :**

01.02.2026 ஞாயிறு வழிபாட்டில் அரசு பொது தேர்வு எழுதும் மாணவர்களுக்கு சிறப்பு ஜெபம் ஏறெடுக்கப்படும்.

இம்மாதம் பிறந்த நாள், திருமண நாள் காணும் ஒவ்வொருவருக்கும் வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன் உங்கள் ஆயர்
அருள்பணி **Y. தேவகுமார்**
ஆயர் / சேகரத் தலைவர்

## பெண்கள் பகுதி



**உபவாசம் மூலம் கடவுளுக்கு சேவை செய்தவள். ( லூக்கா 2:37)**

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

 லூக்கா நற்செய்தி நூலில் அன்னாள் என்ற பெண்மணியைப் பற்றி படிக்கின்றோம். புதிய ஏற்பாட்டில் **தீர்க்கதரிசி** என்று வெளிப்படையாக விவரிக்கப்படும் ஒரே பெண் **அன்னாள்.**

பெண் தீர்க்கதரிசியான இவர் கர்த்தருடைய ஆலயத்தை விட்டு பிரியாமல் இரவும் பகலும் உபவாசத்தோடும் ஜெபத்தோடும் கடவுளுக்குத் திருப்பணி செய்து வந்தார் என்று திருமறை கூறுகிறது. (லூக்கா 2.37)

அன்னான் கணவனை இழந்தபின் கடவுளையும் ஆலயத்தையும் உறுதியாக பற்றிப்பிடித்துக் கொண்டாள். திருமறையில் உபவாசம் பற்றி நாம் படிக்கும்போதெல்லாம் அதன் நோக்கம் ஒரு குறிப்பிட்ட நிகழ்வின்போது கடவுளிடம் ஒருவர் செய்யும் ஜெபத்தின் தீவிரத்தை வெளிப்படுத்தும் வண்ணம் இருக்கிறது. ஆனால் அன்னாள் எருசலேம் ஆலயத்தில் தங்கி இரவும் பகலும் உபவாசமிருந்து ஜெபித்து கர்த்தருக்குச் சேவை செய்து வந்தாள் என்று பார்க்கிறோம்.

ஆலயத்தில் பணிகள் பல உள்ளன. இவை அனைத்தும் வழிபாட்டில் ஒரு பகுதியாகும். அன்னால் தன்னால் முடிந்த குறைந்தபட்ச சேவையாக தீர்க்கதரிசனம் உரைத்து உபவாசம் மற்றும் ஜெபம் வழியாக முழு மனதுடன் கடவுளுக்கு ஊழியம் செய்து பெண் சீடத்துவத்தின் உதாரணமாக இருந்திருக்கிறார்.

ஆலயத்தை விட்டு நீங்காது திருப்பணி செய்தவள்
உபவாசம் இருந்தவள்
ஜெபத்திலே தரித்திருந்தார்

இவரது பல வருடத் தியாகமான ஊழியம் அவர் நீண்ட காலம் காத்திருந்த மேசியாவை நேரில் பார்க்கும் பாக்கியத்தைக் கொண்டு வந்தது. தொழுவத்தில் பிறந்த மன்னனுக்கு மரியாதை செய்த முதல் சிலரில் அன்னாளும் ஒருவர் எனும் சிறப்பை திருமறை இவருக்கு கொடுக்கிறது.

அன்பானவர்களே அன்னாள் வாழ்க்கையில் சந்தித்த பல இழப்புகள் கடவுளுக்கும் அவருக்கும் எந்தப் பிளவையும் ஏற்படுத்தவில்லை. மாறாக, வாழ்நாள் முழுவதும் கடவுளைத் தேடுவதிலும் அவருக்குப் பணி செய்வதிலும் தன்னை ஈடுபடுத்தி சாட்சியாக வாழ்ந்தார். நாமும் நமக்கு கொடுக்கப்பட்ட உபவாச நாட்களில் கடவுளை தேடுவதிலும் ஆலயத்தின் ஆராதனையில் பங்கு பெறுவதிலும் நம்மால் இயன்ற உதவிகளை பிறருக்கு மகிழ்வுடன் செய்து கடவுளின் ஆசீர் பெறுவோம்.

**திருமதி ஜாய்சிலின் தேவகுமார்**
ஆயரம்மா



## 2026 – பிப்ரவரி மாத வழிபாட்டு ஒழுங்குகள்

| நாள்/கிழமை | திருமறைப்பாடம் | இறைச்செய்தித் தலைப்பு | நடத்துனர்/செய்தியாளர் |
|---|---|---|---|
| 02-02-2026<br>ஞாயிறு<br>திருவிருந்து<br>வழிபாடு<br>காலை 8:30 | தொடக்க நூல்<br>1:31-2:3<br>எபிரேயர் 4 : 2-11<br>திருப்பாடல்கள் 24<br>மாற்கு 3: 1-6 | படைப்பின் நிறைவை<br>உறுதி செய்யும்<br>ஓய்வு | ஆயர் |
| 08-02-2026<br>ஞாயிறு<br>காலை 8:30 | ஏசாயா 42:1-9<br>யாக்கோபு 5: 13-18<br>திருப்பாடல்கள்<br>103 : 1-14<br>மத்தேயு 9: 35-38 | மனவுருக்கம் :<br>அன்பிலும்<br>துன்பத்திலும்<br>இணைந்திருத்தல் | திரு. யோகராஜ்<br>CSI ஆவடி<br>குருசேகரம் |
| 15-02-2026<br>ஞாயிறு<br>திருவிருந்து<br>வழிபாடு<br>காலை 8:30 | பாடகற் குழு ஞாயிறு சிறப்பு வழிபாடு<br>தவக்கால ஆயத்த கூட்டம்<br>**Rev. Dr. BJ பிரேமையா**<br>ஆயர் ஓய்வு<br>சென்னைப் பேராயம் | | |
| 18-02-2026<br>காலை 11:00 | **சாம்பல் புதன்**<br>**லெந்து புத்தாக்கத்திற்கான அழைப்பு**<br>எசேக்கியேல் 37:24-36<br>உரோமையர் 11: 33-12 : 2<br>திருப்பாடல்கள் 51<br>மத்தேயு 6: 5-18 | | ஆயர் |
| 20-02-2026<br>முதல் லெந்து<br>வெள்ளி<br>மாலை 7.00 | **ஆற்றுப்படுத்தும் ஆண்டவர்**<br>ஏசாயா 40:1-11 | | **Rev.** ஜெனித் குமார்<br>CSI வாலாஜாபாத்<br>குருசேகரம் |
| 22-02-2026<br>ஞாயிறு<br>காலை 8:30 | ரூத்து 2:4-20<br>எபேசியர் 4: 25-32<br>திருப்பாடல்கள் 145<br>மாற்கு 1: 40-45 | பரிவுள்ளோராய்<br>வாழ அழைப்பு | திரு. ஆனந்தராஜ்<br>CSI கூடுவாஞ்சேரி<br>குருசேகரம் |
| 27-02-2026<br>இரண்டாம்<br>லெந்து வெள்ளி<br>மாலை 7.00 | **நீதி வழங்கும் ஆண்டவர்**<br>ஏசாயா 42:1-9 | | **Rev.** ஜெபமேரி<br>CSI திருப்பெரும்புதூர்<br>குருசேகரம் |

## பிப்ரவரி – 2026 : தங்கள் பிறந்த நாள் காணுவோர்

"என் ஜனங்கள் நான் அளிக்கும் நன்மையினால் திருப்தியாவார்கள் என்று கர்த்தர் சொல்கிறார்." எரேமியா 31:14

01. திருமதி. புவனா டெய்சி குமார்
திருமதி. எஸ்தர் தங்கப்பன்
திருமதி. கெத்சிமா ஹேமலதா

02. திரு. தீபக் ஜோனத்தான்

04. திரு. ஐவர் தாஸ்
திரு. சுந்தர்
திருமதி. ஷர்மிளா மார்க்ரெட் ஜஸ்டஸ்

05. திருமதி. ஷைனி சாமுவேல்

06. செல்வன். ஆபிரகாம்
செல்வி. ஹெப்சிபா
திரு. ஐசக் சாம்ராஜ்

08. திருமதி. ஸ்டெல்லா

09. திரு. இம்மானுவேல் ஜோன்ஸ்

10. திருமதி. எலன் டயானா வசந்த்

11. திருமதி. ஜெயபாய் ஜாய்பெல் இம்மானுவேல்
திரு. ரிஷி ஜேசுதாசன்
திரு. சத்தியகுமார்
திரு. ரூபன்

12. திருமதி. உமாராணி ராஜதுரை

13. செல்வி. கிரேஸ்
செல்வி. விவியானா சில்வஸ்டர்
திருமதி. ஜெமிமா ஹாப்டே தீபக்

15. திருமதி. ஜெயலெட்சுமி சந்திரசேகரன்

16. செல்வி. ரெனிட்டா ஃப்ரெட்ரிக்

17. செல்வி. ஏஞ்சலின் பியர்ல்

18. செல்வன். மிராக்கிள் ஜோஸ்வா

19. திருமதி. பெனிட்டா ரெபேக்கா ஜெயபிரியா
திரு. தாவீது ராஜா

20. செல்வி. முஷ்கிய்ஷா ஷெலினா கிரேஸ்

21. திருமதி. இந்திரா பிரியதர்ஷினி ஜெயகுமார்

22. செல்வன். ஜோஸ்வா ஜேசுதாசன்
செல்வன். ஜோன் நித்திஸ்

23. செல்வி. வினோ சாமுவேல்

24. செல்வன். சஜின் மேத்யு
செல்வி. ஜோஸ்ஃபின் ஜாய்

25. குழந்தை. டேனிகா லியா



## பிப்ரவரி – 2026 : தங்கள் திருமண நாள் காணுவோர் :

"நித்திய மகிழ்ச்சி உங்களுக்கு உண்டாகும்" ஏசாயா 61:7

7. திரு. முத்துராஜா – திருமதி. பாலமேரி தம்பதியினர்

8. திரு. ஜேம்ஸ் சைமன்தாஸ் – திருமதி. ஜாக்குலின் ப்ளாரன்ஸ் தம்பதியினர்

9. திரு. டல்வின் – திருமதி. டதி தம்பதியினர்

12. திரு. சாம் மோசஸ் – திருமதி. சோனியா ஞானமலர் தம்பதியினர்
திரு. ஜெயமனோகரன் – திருமதி. ரோசாமணி தம்பதியினர்

15. திரு. பாக்கியநாதன் – திருமதி. பிரேமா தம்பதியினர்

16. திரு. ஆபிரகாம் ஆனந்த் சிங் – திருமதி. ரேச்சல் ராஜேஸ்வரி தம்பதியினர்

17. திரு. மேஷாக் ஜோன்ஸ் – திருமதி. டாக்டர்.ஏஞ்சல் ராணி ஜெரிட்டா தம்பதியினர்





## கிளை சபைகள் : பிப்ரவரி 2026

"நான் இன்று முதல் உங்களை ஆசீர்வதிப்பேன்' என்று கர்த்தர் சொல்லுகிறார்." ஆகாய் 2:19

<u>தங்கள் பிறந்த நாள் காணுவோர் :</u>

**பனையூர்**
10.02. குழந்தை. ஜேசன் மேத்யு
19.02. திரு. ஸ்டீஃபன் சந்தானம்

**சாலமங்கலம்**
07.02. திரு. வீரசேகர்




**பேரீஞ்சம்பாக்கம்**
12.02. திரு. தானியேல்
13.02. திரு. ராஜசேகர்
26.02. திரு. பொன்மொழி

**வடமேல்பாக்கம்**
11.02. திரு. சுந்தர்
25.02. செல்வி. ஜென்சி
28.02. திருமதி. ஷீலா

**நாவலூர்**
25.02. சோபியா



<u>தங்கள் திருமண நாள் காணுவோர் :</u>

**பேரீஞ்சம்பாக்கம்**
06.02. திரு. முத்து – திருமதி. சந்தியா தம்பதியினர்
21.02. திரு. ரவிவர்மன் – திருமதி. இசை தம்பதியினர்

**சென்னக்குப்பம்**
11.02. திரு. தாமஸ் தாமோதரன் – திருமதி. எப்சிபா தம்பதியினர்

**சாலமங்கலம்**
20.02. திரு. ஜெயக்குமார் – திருமதி. ஷாலினி தம்பதியினர்

**நாவலூர்**
15.02. திரு. டோன் ரஞ்சன் – திருமதி. எமிமாள் பிளெஸ்ஸி தம்பதியினர்

**பனையூர்**
14.02. திரு. எசேக்கியல் – திருமதி. நிஷா தம்பதியினர்



Bible Quiz

## பிப்ரவரி மாதம் வேத வினா பகுதி

**1 நாளாகமம் 16 – 29**

1. பூரிகைகளை ஊத நியமிக்கப்பட்ட ஆசாரியர்கள் யார் ?
2. கர்த்தருடைய தூதன் யாருடைய களத்தண்டையிலே நின்றான் ?
3. கர்த்தரின்.........ஒரு..........க் கட்ட என ............நினைத்திருந்தேன் ?
4. என்னை மகா............சந்ததியின் ............பார்த்தீர். நிரப்புக.
5. நெய்கிறவர்களின் படைமரம் போல் பெரியதாய் இருந்தது எது ?
6. தாவீதின் ஆலோசனைக்காரன் யார் ? அவன் எப்படிப்பட்டவன் ?
7. என் தகப்பனுடைய குமாரருக்குள் என்மேல் பிரியம் வைத்தார். யார் கூறியது ?
8. பாவம் செய்தேன் பொல்லாப்பு நடப்பித்தேன் இந்த ஆடுகள் என்ன செய்தது ? – யார் கூறியது ?
9. நீ அவரை விட்டுவிட்டால் அவர் உன்னை என்றைக்கும் கைவிடுவார் யார் யாரிடம் கூறியது ?
10. கர்த்தரை துதிக்கிறவர்களாய் எத்தனைபேர் இருந்தார்கள் ?

## வேத வினா : சரியாகப் பொருத்துக.

(1 நாளாகமம் 16-29)

| | | |
|---|---|---|
| 1. பெனாயா யாகாசியேல் | X | யோசுவா தலைவன் |
| 2. சவிஷா | X | சிபெக்காய் கொன்றான் |
| 3. ஆசீர்வதித்தபடியால் | X | ஒப்பீரின் தங்கம் மூவாயிரம் |
| 4. கானான் தேசம் | X | சாலொமோன் |
| 5. நான்கு திசையிலும் | X | கர்த்தருக்கு கட்டும் அரமனை |
| 6. சிப்பாயி இராட்சதபுத்திரன் | X | சம்பிரதியாயிருந்தான் |
| 7. எண்ணெய் கிடங்கு | X | சுதந்திரபாகம் |
| 8. அமைதியுள்ள புருஷன் | X | ஆசாரியர்கள் |
| 9. கம்மாளர் செய்யும் வேலை | X | ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும் |
| 10. ஒரு மனுஷனுக்கு அல்ல | X | இளைப்பாறுதல் தந்தார் |

திருமதி. ராய் டேவிட்

**விடைகளை பிப்ரவரி 25-ம் தேதிக்குள் அனுப்பவும்**

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி :
**CSI** *கிறிஸ்து நாதர் ஆலயம்*
6/371, ஞானம்மாள் ரோடு, டேவிட் நகர், படப்பை - 601 301.

## <u>ஜனவரி மாத – வேத வினாப் போட்டி – சரியான விடைகள் :</u>

1. 1 நாளாகமம்.... 1 : 19 பேலேகு
2. 1 நாளாகமம்.... 4 : 10 யாபேஸ்
3. 1 நாளாகமம்.... 15 : 27 தாவீது
4. 1 நாளாகமம்.... 2 : 22 யாவீருக்கு
5. 1 நாளாகமம்.... 14 : 15 முசுக்கட்டை செடியின் இரைச்சல்
6. 1 நாளாகமம்.... 10 : 12 சவுலும் அவன் குமாரனும்
7. 1 நாளாகமம்.... 13 : 9,11 ஊசாவை பேரேஸ் ஊசா
8. 1 நாளாகமம்.... 15 : 29 மீகாள்
9. 1 நாளாகமம்.... 13 : 14 மூன்று மாதம்
10. 1 நாளாகமம்.... 15 : 15 லேவியர், தேவனுடைய பெட்டியை

**பெண்களுக்கான வேதவினாப் போட்டி**

**ஜனவரி மாதம் சரியான விடைகள் அனுப்பியவர்களை வாழ்த்துகிறோம்.**

திருமதி. ஷைலா ரெபேக்கா
செல்வி. ஹாரியட் அற்புதா
திருமதி. பா. கிருபாவதி
திருமதி. மஞ்சு ஆனந்தகுமார்
திருமதி. குளோரி ஸ்டீபன் பால்
திருமதி. ஃபிளைமினி கிறிஸ்டோபர்
திருமதி. நிருபா சார்லஸ்
திருமதி. புனிதவதி பால் வீரபாண்டியன்
திருமதி. ஆலிவ் எபன்
திருமதி. ஜான்சி
திருமதி. ஸ்டெல்லா மேஷாக்
திருமதி. எஸ்தர் சாம் சுந்தர்
திருமதி. எமிலி லில்லி ஜாய்ஸ்
திருமதி. செல்வகுமாரி பிரான்சிஸ்
திருமதி. பிரேமா கிறிஸ்டோஃபர்
திருமதி. ஏஞ்சலின் மேஷாக்
திருமதி. ரோஸ்லின் வத்சலா
திருமதி. மெரிலின் ஷீபா
திருமதி. ரத்னா
திருமதி. வசந்தி டேவிட்
திருமதி. அமுதா அப்பாதுரை
திருமதி. கமலா ஜெரேமியா
திருமதி. பெரில் பாஸ்கர்
திருமதி. தனபாக்கியம்
திருமதி. ஜெயராணி விக்டர்
திருமதி. டாரதி ஸ்டீஃபன்
திருமதி. பானுமதி
திருமதி. ஜாய்ஸ் ராஜா சாமுவேல்
செல்வி. ஜாஸ்வின் சுபிட்சா
திருமதி. ஜெமிமா ஹாப்டே
திருமதி. பெனிட்டா டேனிஸ்
திருமதி. அபிகாயில் மனோரஞ்சிதம்
திருமதி. செல்வரூபி ஆண்ட்ரூஸ்
திருமதி. ஞானதீபம் கிறிஸ்டி
திருமதி. எமீமாள் வேதநாயகம்
திருமதி. ஜீவகனி
திருமதி. ஸ்வீனா பிரவின்
திருமதி. மல்லிகா ஸ்டான்லி
திருமதி. கமலா இமான்வேல்



**ஆண்களுக்கான குறுக்கெழுத்துப் போட்டி**

*ஜனவரி மாதம் சரியான விடைகள் அனுப்பியவர்களை வாழ்த்துகிறோம்.*

திரு. டேவிட் ராஜ்குமார்
திரு. சுரேஷ் ராஜா
திரு. அனிஷ்குமார்
திரு. ஆனந்தகுமார்
திரு. கிறிஸ்டோஃபர் அசரியா
திரு. டேனிஸ் பிரபாகர்
திரு. டியூக் இம்மானுவேல்
திரு. வின்செண்ட் ஜெயராஜ்
திரு. மேஷாக்
திரு. சாலமோன் சந்திரபாபு
செல்வன். நிவின் கார்வின்
திரு. பஞ்சம்
திரு. சாலமோன்
செல்வன். ஜெயகரன்
திரு. ஆண்ட்ரூஸ்
திரு. பால்ராஜ்
திரு. ஸ்டான்லி ராஜ்குமார்
திரு. ராஜா சாமுவேல்
திரு. சாலமன் வில்லியம் ஹாஃப்டே
திரு. இம்மானுவேல் ஜோன்ஸ்

## <u>கிராம நற்செய்தி ஊழியம்</u>

**22.02.2026 நான்காம் ஞாயிற்றுக்கிழமை** மாலை 4.00 மணிக்கு நற்செய்தி ஊழியம் செய்ய ஆலயத்திலிருந்து வாகனம் புறப்படும். இதில் பங்குபெற அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

## லெந்து கால காலைத் தியானம்

அன்பானவர்களே !

பிப்ரவரி 18.02.2026 புதன்கிழமை முதல் நமது ஆலயத்தில் **தபசு கால நாற்பது நாட்களிலும்** திருவிருந்து தினத்தியானம் காலை 6.00 முதல் 6.30 மணி வரை நடைபெறும். சபையார் யாவரும் குடும்பமாகப் பங்கேற்று இறை ஆசி பெற அன்புடன் அழைக்கிறோம்.

**செம்பொருள் : இயேசு - “என்னை பின்பற்றட்டும்”** மத்.16:24

ஆயர்

### சுயவெறுப்பு உண்டியல்


**திருச்சபையார் கவனத்திற்கு :**

தவக்காலத்தில் ஆலயத்திலிருந்து கொடுக்கப்படும் லெந்து கால சுய வெறுப்பு குடும்ப உண்டியல்களைத் தவறாமல் பெற்றுச் சென்று, **03.04.2025 பெரிய வெள்ளிக்கிழமை** ஆராதனையில் ஆலயத்தில் கொண்டு வந்து படைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

## ஆண்களுக்கான குறுக்கு எழுத்துப்போட்டி

## பிப்ரவரி மாதம் - 2025

1 கொரிந்தியர் 1 - 4




**இடமிருந்து வலம் :**

1. கொலோசே பட்டணத்து விசுவாசிகள் யார்மேல் வைத்திருந்த அன்பைக் குறித்து பவுல் கேள்விப்பட்டார் ?

4. தேவனுக்கு.......அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்கள் அடங்கியிருக்கிறது.

9. கொலோசேயர் தேவனுக்கு சித்தமானவைகளெல்லாவற்றிலும்................................. நிச்சயமுள்ளவர்களாய் நிலைநிற்க எப்பாபிரா வேண்டுதல் செய்கிறார்.

10. பிரியமான வைத்தியனாகிய லூக்காவும், .............உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்.

**மேலிருந்து கீழ் :**

2. உலகமெங்கும் பரம்பிப் பலன் தருவது எது ?

3. பவுலுடன் சேர்ந்து கொலோசேகர் நிருபத்தை எழுதியது யார் ?

5. ஸ்தோத்திரத்தோடே எதில் பெருக வேண்டும் ?

6. எஜமான்களுக்கெல்லாம் எஜமான் எங்கு இருக்கிறார் ?


7. இடைவிடாமல் செய்ய வேண்டியது என்ன ?

8. பவுலோடேகூட காவலிலிருந்தது யார் ?

**விடைகளை பிப்ரவரி 25-ம் தேதிக்குள் அனுப்பவும்.**



## ஜனவரி மாதம் ஆண்களுக்கான குறுக்கு எழுத்துப் போட்டிக்கான விடைகள்




"நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள்' என்றார்."  மத்தேயு - 21:22

# பிப்ரவரி மாத உபவாசக் கூடுகை - 2025

**14.02.2025 சனிக்கிழமை**

காலை 10:00 மணிமுதல் 1:00 மணி வரை

இடம்: **CSI கிறிஸ்து நாதர் ஆலயம்**





**தலைமை :**

**Rev. Y.** ***தேவகுமார்,***

ஆயர்

**இறைச் செய்தி :**

***திரு. சாமுவேல் சந்திரசேகரன்*** அவர்கள்

சிறப்புச் செய்தியாளர்

துதி ஆராதனை, சிறப்புப் பாடல்கள், சாட்சிகள், தேவ செய்தி, ஜெபவேளை

அனைவரும் ஒருமித்து ஜெபிக்க இது ஒரு நல்ல வாய்ப்பு!

***அனைவரும் பங்கேற்போம் !   (மதிய உணவு வழங்கப்படும்.)***

## ஜனவரி மாதம் வண்ணம் தீட்டுதல் போட்டியில் பங்கேற்ற பிள்ளைகள்

| | | |
|---|---|---|
| ஜெயானா | - | 3-ம் வகுப்பு |
| F. அபிஷா | - | 6-ம் வகுப்பு |
| J. ராபின்சன் | - | 4-ம் வகுப்பு |
| டானிகாலியா | - | **Pre-KG** |
| தா. பெத்தனி மெட்டில்டா | - | **Pre-KG** |
| ஜெர்ஷோன் | - | 2-ம் வகுப்பு |
| வி. காலேப் ஆரோன் | - | 6-ம் வகுப்பு |
| ஆ. ஆதவன் | - | 1-ம் வகுப்பு |
| M. ஃபீபி ஜொவன்னா | - | **Pre-KG** |
| அன்புராஜன் | - | 4-ம் வகுப்பு |
| S. ஆதன் | - | 1-ம் வகுப்பு |
| மேத்யா | - | 7-ம் வகுப்பு |
| M. ஜெரிக் நத்தானியேல் | - | **L.K.G.** |
| தா. பெனியல் மார்க்ஸ | - | 1-ம் வகுப்பு |
| ஜெனிட்டா மெர்ஸி | - | 5-ம் வகுப்பு |
| D. ஈனோக் மேத்யூஸ் | - | 2 வயது |
| D. ஷிஜா மிரக்கிளின் | - | 2-ம் வகுப்பு |
| ஜூடா ஏஞ்சலின் | - | 1-ம் வகுப்பு |
| ஆ. ஸ்டார் மீகா | - | 4-ம் வகுப்பு |
| A. மைக்கல் ராஜா | - | 4 வயது |
| அதிரையன் | - | 3-ம் வகுப்பு |
| S. இவான்தி | - | 4-ம் வகுப்பு |
| கிஷன்த் | - | 1-ம் வகுப்பு |
| அதிரியா | - | 3-ம் வகுப்பு |
| இ. மரிலியா பிளஸ்லி | - | 3-ம் வகுப்பு |
| M. சைமன் ஐசக் | - | 21/3 வயது |
| தவிஸ் டாவின் | - | 4-ம் வகுப்பு |
| ஷெர்லின் சான்ட்ரா | - | 3-ம் வகுப்பு |
| D. ஈதன் ஜெரேமியா | - | 4-ம் வகுப்பு |
| S. ஜெஸ்லின் ஆய்னா | - | **L.K.G.** |



ஆண்கள் ஐக்கிய சங்கம், படப்பை




**பிப்ரவரி மாதம்**

**திருமறை ஆய்வு – Bible Study**

"உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படி, என் கண்களைத் திறந்தருளும்." சங்கீதம் 119:18

திருமறை ஆய்வு

புதன்கிழமைகளில் மாலை 7.30 மணி முதல் 8.30 மணி வரை

| | | | |
|---|---|---|---|
| முதல் வாரம் | 04.02.2026 | - | **திரு. பால்ராஜ்** |
| இரண்டாம் வாரம் | 11.02.2026 | - | **Dr கிறிஸ்டோஃபர் பாஸ்கரன்** |
| மூன்றாம் வாரம் | 18.02.2026 | - | **திரு. அற்புதராஜ்** |
| நான்காம் வாரம் | 25.02.2026 | - | **திரு. லூக் ஜெயராஜன்** |

ஆயர்
9840198476

திரு. பெனடிக்ட் ஆபிரகாம்
கன்வீனர்
9443011345

**CSI கிறிஸ்துநாதர் ஆலயம் – படப்பை குருசேகரம்**

## குடும்ப ஜெபக்கூடுகை நடைபெறும் இல்லங்கள்

**நாள்: பிரதி வியாழன்** **நேரம் : மாலை 7.00 மணி**

**பிப்ரவரி – 2026**

**05**
*திரு. ஜேக்கப் - திருமதி. குளோரி செலின்*
பிளாட் நெ.5A, நவமணி ரோடு, டேவிட் நகர்,
படப்பை - 601 301.
9176241110

**12**
*திரு. அனிஸ்குமார் - திருமதி. ஜோஸ்லின் சுகந்தி*
ஆராதனா இல்லம்
நவமணி ரோடு, டேவிட் நகர்,
படப்பை - 601 301.
9444600083

*தொடர்புக்கு :*

ஆயர்
9840198476

திரு. டேனிஸ் பிரபாகர், கன்வீனர்
98418 51476

CSI **கிறிஸ்து நாதர் ஆலயம், படப்பை**

**60வது ஆலய ஆண்டுவிழாவை முன்னிட்டு**

# இலவச மருத்துவ முகாம்

**Dr. Mohan's**

**DIABETES SPECIALITIES CENTRE**

டாக்டர் மோகன் நீரிழிவு நோய் மருத்துவமனை

எண் 4 கான்ரான் ஸ்மித் ரோடு,

கோபலபுரம், சென்னை.

**CSI** கிறிஸ்துநாதர் ஆலயம் படப்பை குருசேகரம்

இணைந்து நடத்தும்

மாபெரும் இலவச மருத்துவ பரிசோதனை முகாம்

இந்த மருத்துவ முகாமில் தங்களின்

- உயரம் மற்றும் உடல் எடை
- இரத்த அழுத்தம்
- இரத்த சர்க்கரை அளவு
- உணவு ஆலோசனை

மேற்குரிய பரிசோதனைகளை முற்றிலும் இலவசமாக செய்து அவற்றின் முடிவுகளை உடனுக்குடன் தெரிவித்து தங்களுக்கு உதவ உள்ளோம். எங்கள் நிறுவனம் பல இடங்களில் மக்களுக்கு நீரிழிவு நோயைப் பற்றி விழிப்புணர்வு மற்றும் இலவச நீரிழிவு பரிசோதனை முகாமை நடத்திவருகிறது. இதனை தொடர்ந்து நாங்கள் உங்கள் இடத்தில் இலவச நீரிழிவு முகாம் நடத்த அனுமதி வேண்டுகிறோம்

முகாமின் போது நாங்கள் குளுக்கோமீட்டரின் மூலம் உங்களை பரிசோதனை செய்வோம். அதில் புதிதாக கண்டறியப்பட்ட நீரிழிவு நபர்களை அவர்களின் விருப்பத்துடன், நீங்கள் குறிப்பிடும் இடத்தில் அழைத்து முழு பரிசோதனை செய்வோம். மேலும் எங்கள் மையத்தில் 6 மாதங்களுக்கு சிகிச்சை முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.

**நாள் :- 08.02.2026**

**நேரம் :-** 10.00 மணி முதல் 2.00 மணி வரை

**இடம் :- CSI** கிறிஸ்துநாதர் ஆலயம், பனையூர்

**எழிச்சூர் ஊராட்சி.**

**அனைவரும்** இம்முகாமிற்கு வந்து இந்த அறியவாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்

ஆயர்

செயலர், பொருளர்

சேகரகுழு உறுப்பினர்கள், சபை ஊழியர்கள்



## மூத்தோர் பகுதி

கர்த்தரின் பெரிதான நாமத்தினாலே முதியோர் ஒவ்வொருவரையும் அன்புடன் வாழ்த்துகிறேன். இம்மட்டும் கர்த்தர் தமது மாறாத வார்த்தையினாலும் அளவற்ற கிருபையினாலும் நம்மை நேர்த்தியாய் நடத்தி வந்திருக்கிறார். நம் ஒவ்வொருவரையும் தாயின் வயிற்றில் உற்பத்தியானது முதல் தாங்கி நடத்தி வருகிற அன்பின் தேவன்,"உங்கள் முதிர் வயது வரைக்கும் நான் அப்படிச் செய்வேன்;நரை வயது மட்டும் நான் உங்களைத் தாங்குவேன். நான் அப்படிச் செய்து வந்தேன்; இனிமேலும் நான் ஏந்துவேன்; நான் சுமப்பேன், நான் தப்புவிப்பேன்" என்று ஏசாயா 46:3–4ல் வாக்குத்தத்தம் கொடுத்திருக்கிறார். கர்த்தர் நம்மை படைத்தவர் மட்டுமல்ல; நம்மை பாதுகாத்து தாங்குகிறவரும் அவரே. பலவீனம் மற்றும் இயலாமை ஏற்படும் முதுமையிலும் கர்த்தரின் பராமரிப்பு தொடரும்.நம் இறுதி மூச்சு வரை அவர் நம்மை ஆதரிப்பார், பாதுகாப்பார், விடுவிப்பார்.முதுமையில் தனிமை என்பது மிகவும் கொடியதாகும். அது உடல்நலக் குறைவு, மனச் சோர்வு, சமூக விலகல் போன்ற பல பிரச்சனைகளுக்கு வழிவகுக்கும்.இதனைத் தவிர்க்க முதலாவதாக நாம் நம் உடல்நலத்தில் கவனம் செலுத்த வேண்டும்.முறையான உடற்பயிற்சி, ஆரோக்கியமான உணவு ஆகியவற்றை கடைபிடித்து, மன அழுத்தம் வராமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.போதுமான நிதி வசதி மனநிம்மதிக்கு உதவும்.மேலும் சபை காரியங்கள், கிராம ஊழியங்கள், மருத்துவமனை ஊழியங்கள் போன்றவற்றில் நம்மை ஈடுபடுத்திக் கொள்ளலாம். கர்த்தருக்குள் நம் வாழ்க்கையை திட்டமிட்டு அமைத்துக்கொண்டால், முதுமையில் தனிமை கூட இனிமையாக மாறும். தாவீது ராஜா தனியாக இருந்தபோது இவ்வாறு வேண்டுதல் செய்கிறார்:"என் மேல் நோக்கமாகி, எனக்கு இரங்கும்;நான்தனித்தவனும் சிறுமைப்படுகிறவனுமாயிருக்கிறேன்.என் இருதயத்தின் வியாகுலங்கள் பெருகி இருக்கிறது;என் இடுக்கண்களுக்கு என்னை நீங்களாக்கிவிடும்." சங்கீதம் 25:16 நாமும் தனியாக இருக்கும் நேரங்களில் நம்முடைய எல்லா கவலைகளையும் கர்த்தரிடத்தில் எடுத்துச் சென்று, அவருடைய வார்த்தையில் ஆறுதல் அடைவோமாக. கர்த்தர் தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக.

**திரு. நவராஜ் ரவீந்திரன்**

**கன்வீனர்**

CSI கிறிஸ்து நாதர் ஆலயம்,
படப்பை குருசேகரம்

## பாடகர் குழு
## சிறப்பு ஒருநாள் ஒடுக்கக் கூட்டம்

நாள்
**15.02.2026 ஞாயிற்றுக்கிழமை**

நேரம்
**காலை 8.30 மணிமுதல்**

சிறப்பு செய்தியாளர்

**Rev. Dr BJ பிரேமய்யா** அவர்கள்
முன்னாள் பேராய செயலாளர்
(ஓய்வு பெற்ற ஆயர்)
சென்னைப் பேராயம்

ஆலய பாடகற் குழுவினர் அனைவரும்
இச்சிறப்பு கூடுகையில் தவறாமல்
பங்கேற்று இறையாசி பெற
அன்புடன்
அழைக்கிறோம்.



அதற்கு அவர்கள்: எழுந்து கட்டுவோம் என்றார்கள்; இந்நல்ல வேலையைச் செய்யத் தங்கள் கைகளைத் திடப்படுத்தினார்கள்.
நெகேமியா 2:18

*Special sale*
*For* **SALAMANGALAM CHURCH CONSTRUCTION**

**சாலமங்கலம் ஆலய கட்டிட பணிக்காக சிறப்பு விற்பனை விழா**

**Feb 01 2026**

10:00 AM - 2:00 PM

CSI கிறிஸ்து நாதர் ஆலயம்
படப்பை குருசேகரம்

**ஜெபியுங்கள் !**
**பங்கு பெறுங்கள் !!**








## சிறுவர் பகுதி <u>வண்ணம் தீட்டுதல்</u>

(10 வயதுக்கு உட்பட்ட சிறு பிள்ளைகள் மட்டும்)

**<u>மனப்பாட வசனம்</u>**

இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகதிகமாய் விருத்தியடைந்தார். லூக்கா 2 : 52





திருமதி. ஜோஸ்லின் அனிஷ்குமார்

**பெயர் :**

**வகுப்பு :** **கையொப்பம் :**

**வண்ணம் தீட்டிய படத்தை பிப்ரவரி 25-ம் தேதிக்குள் ஆலயத்தில் சேர்க்கவும்**

சிறுவர் பகுதி வண்ணம் தீட்டுதல்

(10 வயதுக்கு உட்பட்ட சிறு பிள்ளைகள் மட்டும்)

மனப்பாட வசனம்

இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகதிகமாய் விருத்தியடைந்தார். லூக்கா 2 : 52



திருமதி. ஜோஸ்லின் அனிஷ்குமார்

பெயர் :

வகுப்பு : கையொப்பம் :

வண்ணம் தீட்டிய படத்தை பிப்ரவரி 25-ம் தேதிக்குள் ஆலயத்தில் சேர்க்கவும்